# நாள்தோறும் பதறப் பதற பதற்றம்!

# “தூய சக்தி” ஆட்சியில் அரங்கேறும் அலங்கோலங்கள்!

### புதுக்கோட்டை அருகே காரில் கடத்திச் சென்று

## மாற்றுத்திறனாளி பெண் கூட்டு பலாத்காரம்!

### த.வெ.க. ஆட்சியில் ஆரம்பமானது பாலியல் பலாத்காரம்!



புதுக்கோட்டை, மே 21 -

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியைச் சேர்ந்த திருமணமாகாத 35 வயது மாற்றுத்திறனாளி பெண், கடந்த 17ம்தேதி அரிசி ஆலைக்கு வேலைக்கு சென்றார். மாலை வேலை முடிந்து வீட்டுக்கு செல்ல பஸ்சில் ஏறி அமர்ந்தார். அப்போது அந்த வழியாக காரில் வந்த அந்த பெண்ணுக்கு ஏற்கனவே அறிமுகமான 2 பேர், வீட்டில் இறக்கி விடுவதாக கூறினர்.

அந்த பெண், பஸ்சிலிருந்து இறங்கி காரில் ஏறி சென்றார். சிறிது தூரத்தில் உள்ள குளக்கரை அருகே கார் நின்றது. பின்னர் காருக்குள் வைத்து அந்த பெண்ணை 2 பேரும் சேர்ந்து கூட்டு பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த பெண் மயக்கமடைந்ததால் அவரை கறம்பக்குடி ஆலங்குடி சாலையில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் தள்ளி விட்டு சென்றனர்.

அப்போது அந்த வழியாக வந்த கறம்பக்குடி போலீஸ் ஏட்டு வாசுகி, மயக்க நிலையில் கிடந்த பெண்ணிடம் நடந்த விபரத்தை கேட்டறிந்ததோடு அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு ராணியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக மழையூர் போலீசார் விசாரணை நடத்தியதில், மணக்கொல்லையை சேர்ந்த கார் உரிமையாளர் சேகர் (53), அவரது நண்பர் கூலித்தொழிலாளி மாரிமுத்து (52) ஆகியோர் கூட்டு பலாத்காரத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதுகுறித்து மலையூர் போலீசார், கூட்டு பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட 5 பிரிவுகளில் வழக்கு பதிந்து மாரிமுத்துவை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். 4 தனிப்படையினர் தலைமறைவான சேகரை தேடி வந்த நிலையில் திண்டுக்கல்லில் அவரை நேற்று கைது செய்தனர். இதுதொடர்பாக அவர்களிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு உரிய நீதி மற்றும் நிவாரணம் வழங்கவும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி மழையூர் காவல் நிலையம் முன்பு புதுக்கோட்டை கறம்பக்குடி சாலையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் 2 கிராம மக்கள் நேற்று காலை 11.30 மணியளவில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். புதுக்கோட்டை நகர துணை காவல் கண்காணிப்பாளர் பிருந்தா மற்றும் வருவாய் கோட்டாட்சியர் பிரகாஷ் ஆகியோர் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பெண்ணின் திருமணம் ஆகாத சகோதரருக்கு ஊரக வளர்ச்சி துறையில் தற்காலிக அலுவலக உதவியாளர் பணி வழங்கப்படும், பாதிக்கப்பட்ட பெண் குடும்பத்திற்கு அதிகபட்ச நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும், கைதான இருவர் மீதும் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்யப்படும், வழக்கை விரைந்து விசாரணை செய்து அதிகபட்ச தண்டனை வாங்கி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எழுத்துப்பூர்வமாக உத்திரவாதம் கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து மறியல் போராட்டம் 3.30 மணிக்கு கைவிடப்பட்டது.

★ மாற்றுத்திறனாளி பெண்ணை தரையில் படுக்க வைத்ததாக வீடியோ வைரல்

பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பெண்ணிற்கு மருத்துவமனையில் உரிய படுக்கை வசதி வழங்காமல், தரையில் படுக்க வைக்கப்பட்டுள்ளதாக காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் கலைவாணி கூறுகையில், “பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு உரிய முறையில் அனைத்து மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டு, சிகிச்சை யளிக்கப்பட்டு வருகிறது.

அந்த பெண் தனது படுக்கைக்கு கீழே அமர்ந்து உணவு அருந்தி கொண்டிருந்த போது, ஒரு சிலர் அத்துமீறி மருத்துவமனைக்குள் நுழைந்து அவரை வலுக்கட்டாயமாக தரையில் படுக்க வைத்து வீடியோ எடுத்துள்ளனர். இது குறித்து சிசிடிவி காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அத்துமீறி நுழைந்து தவறான தகவலை பரப்பிய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

---

### த.வெ.க. அரசுக்கு எதிர் கருத்துகளை முன் வைக்கும்

## யூடியூப், இன்ஸ்டாகிராம் கணக்குகளை முடக்க முயற்சி!

### சைபர் கிரைம் மூலம் நடவடிக்கை!

திருப்பூர், மே 21 -

சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு பிறகு ஆளும் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் யூடியூப் சேனல்கள், சமூக வலைதள பக்கங்களை குறிவைத்து அவற்றின் மீது ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான போலி புகார் அளித்து முடக்க முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுமட்டுமன்றி, கணக்குகளை ஹேக்செய்ய ஓடிபி மற்றும் மர்ம லிங்குகளை அனுப்பி ஊடுருவ முயலும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சமூக வலைதளங்களில் அரசியல் பேசி வரும் சில நெறியாளர்கள் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

அதே நேரத்தில் மாற்றுக்கருத்துடைய ஊடக பக்கங்களை முடக்க நடக்கும் இந்த டிஜிட்டல் அச்சுறுத்தல்கள் குறித்து, காவல் துறை சைபர் கிரைம் பிரிவினர் தனி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து ஸ்ட்ரேஞ்ச் டாக்ஸ் பக்கத்தின் நெறியாளர் சமூக வலைதளபக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், “கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை எங்களது பக்கத்தில் ஒரு புலனாய்வு வீடியோ வெளியிட்டிருந்தோம்.

அதில், சுமார் 100க்கும் மேற்பட்ட இன்ஸ்டாகிராம் பக்கங்கள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜவிற்கு ஆதரவாக செயல்பட்டு வந்ததையும், தற்போது திடீரென அவை நடிகர் விஜய்க்கு ஆதரவான பக்கங்களாக மாற்றப்பட்டு அவரை தேசிய அளவிலான தலைவராக முன் நிறுத்த முயல்வதையும் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கியிருந்தோம். இந்த வீடியோ வெளியான அடுத்த அரை மணி நேரத்திலேயே எங்களது சமூக வலைதள பக்கங்களை முடக்குவதற்கான முயற்சிகள் தீவிரமாக தொடங்கின.

எங்களது யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்குகளை முடக்குவதற்காக தொடர்ந்து போலி புகார்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், நேற்று முன்தினம் முழுவதும் எங்களது இன்ஸ்டாகிராம் பக்கத்திற்குள் நுழைய முயன்று, அதற்கான ஓடிபி மற்றும் லிங்குகளை தொடர்ந்து அனுப்பியுள்ளனர். அதேபோல, மைக்ரோசாப்ட் கணக்கு மூலமாகவும் எங்களது யூடியூப் பக்கத்தை ஹேக் செய்ய ஒன்டைம் பாஸ்வேர்டுகளை அனுப்பி பார்த்துள்ளனர். ஒரு வேளை அவர்கள் அனுப்பிய லிங்க்கை நாங்கள் கிளிக் செய்திருந்தால், எங்களது ஒட்டுமொத்த சேனலும் ஹேக் செய்யப்பட்டிருக்கும். இதற்கு பின்னணியில் தவெக அரசு அமைய உறுதுணையாக இருந்த ரூட் நிறுவனம் இருக்கலாம் என சந்தேகம் எழுப்பியுள்ளார். எங்கள் சேனல் முடக்கப்பட்டாலும் மீண்டும் மக்களுக்காக உண்மைகளை வேறொரு சேனல் மூலம் பதிவிட்டுக்கொண்டேதான் இருப்போம்” என்று தெரிவித்துள்ளார்.

---

### த.வெ.க. பெண் எம்.எல்.ஏ.வுக்கு ராஜகம்பீர ‘சோபா’!

## பிளாஸ்டிக் சேரில் அமர வைக்கப்பட்ட அரசு அதிகாரிகள்!

### ‘சோபா மாடல்’ அதிகாரம்!



கோவை, மே 21-

கோவை கவுண்டம்பாளையம் தொகுதி த.வெ.க. பெண் எம்.எல்.ஏ. கனிமொழி சந்தோஷ். இவர், சமீபத்தில் தனது வீட்டில் கவுண்டம்பாளையம் பகுதி பொது சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். இதில், பொது இடங்களில் சுகாதார பணிகள் சிறப்பாக செய்ய வேண்டும். நோய் தொற்று இல்லாமல் கவனித்துக்கொள்ள வேண்டும், குப்பை கழிவுகளை உடனடியாக அகற்ற வேண்டும், நகர்ப்பகுதியை சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என உத்தரவுகளை வழங்கினார்.

அப்போது, அவர் ராஜகம்பீர சொகுசு சோபாவில் தனி ஆளாக அமர்ந்து, அதிகாரிகளை சாதாரண பிளாஸ்டிக் நாற்காலியில் இடநெருக்கடியுடன் உட்கார வைத்து ஆலோசனை செய்துள்ளார். இதுதொடர்பாக புகைப்படத்தை எம்.எல்.ஏ. கனிமொழி சந்தோஷ், தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

இதை பார்த்த பொதுமக்கள், “இன்னும் நீங்கள் இந்த சோபா மாடல் அதிகாரத்தை விடவில்லையா, முதல்வர் விஜய்க்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில் இப்படி செயல்படலாமா?, நீங்கள் வீட்டில் ஆலோசனை கூட்டம் நடத்தியதே தவறு. பொது இடங்களுக்குச் சென்று என்ன நடக்கிறது என பார்வையிட்டிருக்க வேண்டும், நேரில் கள ஆய்வு செய்திருக்க வேண்டும். சட்டமன்ற தொகுதி அலுவலகம் அல்லது பொது சுகாதார துறை அலுவலகத்திற்கு அதிகாரிகளை அழைத்து அங்கே வைத்து மீட்டிங் போட்டிருக்க வேண்டும். நீங்கள் ஏதோ மகாராணி போல் நடந்து கொள்கிறீர்கள். இப்பதான் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள்... அதுக்குள்ளே இப்படியா...” என த.வெ.க.வின் விர்ச்சுவல் வாரியர்ஸ் மற்றும் நெட்டிசன்கள் சமூக வலைதளங்களில் வறுத்தெடுக்கின்றனர்.

ஏற்கனவே, கனிமொழி சந்தோஷ் ஜோதிடம் மூலமாக கேன்சர் உள்ளிட்ட பல்வேறு நோய் தீர்ப்பதாக கூறி ரீல்ஸ் போட்டு கடும் எதிர்ப்பை சம்பாதித்தவர். மேலும், ‘லவ் ஸ்பெஷலிஸ்ட்‘ என்றும் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, இவரின் பந்தா அரசியல் தொடர்பாக சமூக வலைதளங்களில் கடும் எதிர்ப்பு குவிந்து வருகிறது.

இவர், மீட்டிங் போட்டோவை சோசியல் மீடியாவில் பதிவிட்டது கடும் எதிர்ப்பை கிளப்பி உள்ளது. இவர் ரீல்ஸ் போட்டு பிரபலமாகி கட்சியில் எம்எல்ஏ ‘சீட்’ வாங்கினாராம். எனவே, ரீல்ஸ் போட்டு மேலும் பிரபலமாக இந்த வேலையை தொடர்ந்து செய்து வருவதாக தவெகவினரே கூறுகின்றனர்.

---

### பைல்களை எடுத்துட்டு வா!

## பெண் எஸ்.பி.யை மிரட்டிய த.வெ.க. எம்.எல்.ஏ., சகோதரி!

### மாவட்ட ஆட்சியரிடம் புகார்!

ஈரோடு, மே 21 -

பைல்களை எடுத்துட்டு வரச் சொல்லுங்க என்று போலீஸ் அதிகாரி மூலம் பெண் எஸ்.பிக்கு த.வெ.க. எம்எல்ஏ, சகோதரி மிரட்டல் விடுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக பெண் எஸ்.பி, மாவட்ட கலெக்டரிடம் புகார் அளித்து உள்ளார்.

ஈரோடு மேற்கு தொகுதி சட்டமன்ற தேர்தலில் தவெகவை சேர்ந்த ஆனந்த் மோகன் வெற்றி பெற்று, எம்.எல்.ஏ.வாக பொறுப்பேற்றார். இதையடுத்து, ஈரோடு வந்த எம்எல்ஏ ஆனந்த் மோகன், டாஸ்மாக் கடையில் பாட்டிலுக்கு ரூ.20 அதிக விலைக்கு விற்றதாக குடிமகன்கள் அளித்த புகாரை தொடர்ந்து, டாஸ்மாக் கடைக்கு நேரில் சென்று பஞ்சாயத்து செய்தார்.

அதேபோல், சாலைப்பணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வு செய்தார். இந்நிலையில், எம்.எல்.ஏ. ஆனந்த் மோகன் மற்றும் அவரது சகோதரி இருவரும் போலீஸ் அதிகாரி ஒருவரிடம் மாவட்டம் சார்ந்து குற்ற நடவடிக்கை குறித்து ஆய்வு செய்ய வேண்டும், அதற்கு மாவட்ட எஸ்.பி. கிரண் ஸ்ருதியை கோப்புகளை எடுத்து கொண்டு எம்.எல்.ஏ. முகாம் அலுவலகத்திற்கு விரைவாக வர சொல்லுங்கள் என தகவல் தெரிவித்து அனுப்பி வைத்தனர். இதையறிந்த மாவட்ட எஸ்பி கிரண் ஸ்ருதி, “எம்.எல்.ஏ.வை நாம் ஏன் சந்திக்க வேண்டும். அவருக்கு எதுக்கு மாவட்ட பைல்கள்” என அதிருப்தி அடைந்தார். மேலும் கோபமடைந்த எஸ்.பி., மாவட்ட கலெக்டரிடம் புகார் தெரிவித்துள்ளார்.

இதையறிந்து அவரும் அதிர்ந்து போனார். எம்.எல்.ஏ.வின் அதிகாரம், அவர்களது பணி என்னவென்று தெரியாமல் மேற்கு தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. சுற்றி வருகிறார். அவரிடம் எடுத்து கூறினால் புரிந்து கொள்வார் என காவல் துறையினர் எஸ்பி.யை சமாதானம் செய்துள்ளனர். இதையடுத்து, பெருந்துறை டி.எஸ்பி., எம்.எல்.ஏ.வின் தந்தை கலைச்செல்வனிடம் கலெக்டர், எஸ்.பி. ஆகியோர் புகார் அளித்தால் எம்எல்ஏ பதவியை தொடர்வதற்கே சிக்கல் எழும், எம்.எல்.ஏ. இப்படி செய்யக்கூடாது, தவறான முன்னுதாரண மாகி விடும் என எச்சரித்துள்ளார். இது குறித்து எம்.எல்.ஏ.விடமும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனால், எம்.எல்.ஏ. ஆனந்த் மோகன் தனது தவறை உணர்ந்து, உடனடியாக மாவட்ட எஸ்.பி. கிரண் ஸ்ருதியிடம் செல்போனில் தொடர்பு கொண்டு மன்னிப்பு கேட்டார். மேலும், நேரில் சென்று மரியாதை நிமித்தமாக சந்தித்து பகிரங்கமாக மன்னிப்பு கேட்டதாகவும் போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### சட்டவிரோதமாக

## எம்.சாண்ட் கடத்திய த.வெ.க.வினர்!

திருச்சுழி, மே 21 -

திருச்சுழி அருகே எம்.சாண்ட், உடை கல் கடத்திய தவெக நிர்வாகிகளின் லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டன. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி சுற்று வட்டார பகுதிகளில் உரிய அனுமதி சீட்டு இன்றி கனிம வளங்கள் கடத்தப்படுவதாக வருவாய்த் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து அருப்புக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியர்கள் சிவனாண்டி, முனியாண்டி தலைமையிலான வருவாய்த் துறையினர் திருச்சுழி அருகே புலியூரான் மற்றும் மேலக்கண்டமங்கலம் பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது புலியூரான் பகுதியில் எம்.சாண்ட் ஏற்றி வந்த டாரஸ் லாரியை நிறுத்தி சோதனை செய்தனர். உரிய அனுமதி சீட்டு இன்றி எம்.சாண்ட் கடத்தி வந்தது தெரியவந்தது. அதேபோல் மேலக்கண்டமங்கலம் பகுதியில் சென்ற மற்றொரு டாரஸ் லாரியையும் நிறுத்தி சோதனை செய்த போது, உடைகல் கடத்தியது கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு டாரஸ் லாரிகளையும் வருவாய்த்துறையினர் பறிமுதல் செய்து திருச்சுழி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட லாரிகள், முதுகுளத்தூர் முன்னாள் எம்எல்ஏ முருகனின் மகன் கார்த்திக், அமமுக முன்னாள் கமுதி ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம் ஆகியோருக்கு சொந்தமானவை என கூறப்படுகிறது.

இவர்கள் கடந்த வாரம் அமமுகவில் இருந்து விலகி, நிதியமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் தவெகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு கல்லூரணி பகுதியில் கல்குவாரியும், குருணைக்குளம் பகுதியில் கிரஷரும் செயல்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக மண்டல துணை வட்டாட்சியர்கள் அளித்த புகாரின் அடிப்படையில், திருச்சுழி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

### தலைமைச் செயலகத்தில்

## முதல்வர் அறையில் ரீல்ஸ் எடுத்து அலப்பறை!

### சமூக வலைதளங்களில் விமர்சனம்!

சென்னை, மே 21 -

த.வெ.க.வினரிடமிருந்த ரீல்ஸ் மோகம் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து அரசு அலுவலர் ஒருவர் தலைமைச்செயலகத்தில் முதல்வர் விஜய் அறையில் ரீல்ஸ் எடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாகச் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள். முதல்வர் விஜய் தலைமையிலான அரசு அமைந்தது முதல் எல்லா இடங்களிலும் ரீல்ஸ் எடுத்து கடும்விமர்சனத்திற்கு உள்ளாகும் வகையிலான செயல்களில் தவெவினர் ஈடுபட்டு வருகிறார்கள். தவெக ரீல்ஸ் ஆட்சி நடத்தாமல் ரியல் ஆட்சி நடத்த வேண்டும் என எதிர்கட்சியினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

குறிப்பாக, தவெக அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் தாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் ரீல்ஸ் எடுத்துப் பின்னணி இசையுடன் சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருவது விமர்சனத்திற்கு உள்ளாகிவருகிறது. அதிலும் சில நாள்களுக்கு முன்னர் தவெக சட்டமன்ற உறுப்பினர் நிறுவனம் ஒன்றியில் ஏற்பட்ட தீ விபத்தைப் பார்வையிடச் சென்றதை ரீல்ஸாக எடுத்து அதை மாஸ் பாடலுடன் இணைத்துச் சமூக வலைதளங்களில் பதிவிட்டது கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. சில நாள்களுக்கு முன்னர் தலைமைச் செயலகத்தில் துணை சபாநாயகர் ரவிசங்கர் அறையில் அவரது நாற்காலியில் அவரது நண்பர்கள் புகைப்படம் எடுத்தது சமூக வலைதளங்களில் விமர்சனத்திற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தவெகவினரிடம் இருந்த ரீல்ஸ் மோகம் அரசு அலுவலர்களிடமும் பரவி அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துள்ளது. நேற்று, தலைமைச்செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் முதல்வர் அறையில் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது, முதல்வர் ஆலோசனையில் ஈடுபட்டு இருப்பதையும் பொருட்படுத்தாத அரசு அலுவலர் ஒருவர் முதல்வர் முன்னிலையில் ரீல்ஸ் எடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் முதல்வர்அறையில்அதிகாரிகளோ அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களோ இது போல ரீல்ஸ் எடுக்கும் செயல் நடைபெற்றதில்லை என்று சமூக வலைதளங்களில் விமர்சித்து வருகிறார்கள்.

---

## டாஸ்மாக்கில் மாமூல் கேட்டு த.வெ.க.வினர் மிரட்டல்!

### ஊழியர்கள் வேலைநிறுத்தம்! கடைகள் அடைப்பு!

மயிலாடுதுறை, மே 21 –

தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளில் மதுபாட்டிலுக்கு கூடுதலாக ரூ.10 வசூலிப்பதாக புகார்கள் வந்ததையடுத்து த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள் சென்று விசாரித்தனர். பல இடங்களில் கூடுதலாக வசூலிக்கும் 10 ரூபாயில் தங்களுக்கு மாமூல் கேட்டு மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கூடுதல் வசூலில் த.வெ.க.வினர் கண்டிப்பாக தங்களுக்கு மாமூல் வழங்க வேண்டும் உத்தரவு போட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், சீர்காழியில் உள்ள டாஸ்மாக் கடையில் மதுபாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலிப்பதாக த.வெ.க. நிர்வாகி பொய் புகார் அளித்ததாக கூறப்படுகிறது. அந்த புகாரின்பேரில் கடை மேற்பார்வையாளர், விற்பனையாளர் மீது சீர்காழி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

த.வெ.க.வினரின் மிரட்டலை கண்டித்தும், வழக்கை வாபஸ் பெறக்கோரியும் மயிலாடுதுறை மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகளை அடைத்து ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊழியர்களின் இந்த திடீர் போராட்டம் காரணமாக மயிலாடுதுறை மாவட்டத்தில் 42 மதுபான கடைகளும் திறக்கப்படவில்லை. இதனை தொடர்ந்து டாஸ்மாக் ஊழியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் மயிலாடுதுறை மகலெக்டர் அலுவலகத்திற்கு சென்று கலெக்டரின் நேர்முக உதவியாளர் முத்துசாமியிடம் மனு அளித்தனர்.

இது குறித்து டாஸ்மாக் ஊழியர்கள் கூறுகையில், “ஒரு நாளைக்கு ரூ.8 லட்சத்துக்கு விற்பனை நடைபெறும். அரசு நிர்ணயம் செய்ததை விட கூடுதலாக 10 ஊழியர்கள் தற்காலிகமாக தங்களால் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கடையின் கூடுதல் வாடகை மற்றும் மின் கட்டணம், லாரிகளில் சரக்கு ஏற்றி வரும்போது அளிக்கப்படும் மாமூல் ஆகியவற்றை நாங்கள் தான் கொடுக்க வேண்டியுள்ளது. அரசே இந்த செலவுகளை ஏற்க வேண்டும்.

2 ஊழியர்களை மட்டும் வைத்து கடை நடத்தினால் கூட்டம் அதிகரித்து சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படும். எங்களை மிரட்டுபவர்களிடம் இருந்து போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும். 2 ஊழியர்கள் மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற வேண்டும். எங்களது கோரிக்கை நிறைவேறும் வரை டாஸ்மாக் கடைகளை திறக்க மாட்டோம்” என்றனர்.